DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

| | | |
|---|---|---|
| Calender Miscellaneous | : | **CC.No. 394 /2024** |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of witness for | : | Pw.1 |

| | | |
|---|---|---|
| Name | : | முனியசாமி |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day February of 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:–**

நான் தற்போது தேசியனேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 4 வருடத்திற்கு முன்பு எனது மகன் ரஞ்சித்குமார் இருசக்கர வாகனத்தில் காரியாபட்டிலிருந்து ஆவியூர் டிவிஎஸ்க்கு எதிரே உள்ள கடைக்கு சென்றார். நான் எனது ஊரிலிருந்த போது எனது தம்பி மகன் தங்கராசு இரவு 7.15 மணியளவில் எனக்கு போன் மூலம் எனது மகன் டிவிஎஸ் நிறுவனம் அருகே விபத்து ஏற்பட்டு விட்டதாக கூறினார். நான் சம்பவ இடத்திற்கு செல்லும் வழியிலேயே எனது மகனை காரியாபட்டி மருத்துவமனைக்கு எடுத்து சென்றதாக தகவல் கிடைத்து. நான் உடனே காரியாபட்டி மருத்துவமனைக்கு சென்று எனது மகனை பார்த்த போது தலை, கை, கால்களில் காயங்கள் இருந்தது. எனது மகன் என்னிடம் டிவிஎஸ் ரோடு எதிரே மேற்கிலிருந்து கிழக்காக மதுரை – அருப்புக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையை கடக்கும் போது மதுரையிலிருந்து காரியாபட்டியை நோக்கி வந்த ஒரு நான்கு சக்கர வாகனம் தன்னை மோதிவிட்டதாக கூறினார். பின்னர் எனது

மகனை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு எடுத்து செல்லும் வழியிலேயே எனது மகன் இறந்துவிட்டார். மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்ற பின்பு எனது மகன் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துவிட்டார்கள். பின்னர் மறுநாள் காலை சுமார் 6.00 மணியளவில் ஆவியூர் காவல் நிலையம் சென்று விபத்து சம்மந்தமாக புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு **அசா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் முபாரக் என்ற நபர் தான் விபத்தை ஏற்படுத்தினார் என்று கேட்டு தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லையென்றால் சரிதான். வேற நபர்கள் மூலம் தான் தகவல் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். எனது மகன் ரோட்டை கடக்கும் போது தான் விபத்து ஏற்பட்டது என்ற சங்கதி தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். எந்த வாகனம் விபத்தை ஏற்படுத்தியதை பற்றி எனக்கு தெரியாது என்றால் ஏதோ ஒரு நான்கு சக்கர வாகனம் ஆகும்.

**மறுவிசாரணை**

இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender Miscellaneous : **CC.No. 394 /2024**

Preliminary Register :

Sessions :

Deposition of witness for : Pw.2

Name : சுரேஷ்
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day February of 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ஆவியூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஆவியூர் TVS அருகே உள்ள பாத்ரூமில் காவலாளியாக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. சுமார் 4 1/2 வருடத்திற்கு முன் நான் TVS அருகே உள்ள பாத்ரூமில் காவலாளியாக பணியில் இருந்த போது, இரவு 07.00 மணியளவில் TVS எதிரிரே உள்ள பேருந்து நிருத்தம் அருகே விபத்து ஏற்றபட்டது போல் சத்தம் கேட்டது. பிறகு நானும் என்னுடன் இருந்த ராமகிருஷ்ணன் சென்று பார்த்த போது, ரஞ்சித்குமார் என்பவர் தனது வாகனத்தில் காரியாபட்டியில் இருந்து தனது கடைக்கு செல்லும் வழியில் மதுரையிலிருந்து அருப்புகோட்டை செல்லும் வழியில் வந்து Bollero நான்கு சக்கர வாகனம் மோதியதாக இருந்தது. நாங்கள் சென்று பார்த்த போது ரஞ்சித்குமார் என்பவருக்கு கை, மூக்கில் காயம் இருந்தது. பிறகு நான் தங்கராசு என்பவருக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன். பிறகு ரஞ்சித்குமாரை 108 அம்புலன்ஸ் மூலம்

காரியாபட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த இடத்தல் இதற்கு முன்னர் விபத்து நடந்துள்ளது என்றால் சரிதான். இருசக்கர வாகனம் ரோட்டில் ஒரு புறத்தில் இருந்து மறு புறம் சென்ற போது தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். சம்பவ இடத்தல் Divider, Signal இல்லாததால் தான் விபத்து நடந்தது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender Miscellaneous : **CC.No. 394 /2024**

Preliminary Register :

Sessions :

Deposition of witness for : Pw.3

Name : ராமகிருஷ்ணன்
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day February of 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ஆவியூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் TNPSC தேர்விற்கு வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 08.07.2021 ம் தேதி நானும் அ.சா.2 ம் TVS அருகே உள்ள ரஞ்சித் ஒர்க்ஸ்ஷாப்பில் அமர்ந்து பேசிகொண்டிருந்தோம். ரஞ்சித்குமார் காரியாபட்டிக்கு செல்வதாக எங்களிடம் கூறிவிட்டு சென்றதால், நாங்கள் TVS அருகே உள்ள பாத்ரூம் அருகே சுமார் 07.15 மணியளவில் நின்று பேசிகொண்டிருந்த போது ரஞ்சித்குமார் காரியாபட்டியில் இருந்து சாம்மான்கள் வாங்கிக்கொண்டு அவருடைய இருசக்கர வாகனத்தில் வந்து எங்களிடமும் பேசிவிட்டு மேற்கே இருந்து கிழக்காக மதுரை – அருப்புக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையை கடக்கும் போது மதுரையிலிருந்து அருப்புக்கோட்டை செல்லும்மார்க்கம் வந்த Bollero நான்கு சக்கர வாகனம் ரஞ்சித்குமார் வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியது போல் டம் என்று சத்தம் கேட்டதால் விபத்து என்று நினைத்து நானும் அ.சா.2 ம் பார்த்த போது, ரஞ்சித்குமார் என்பவருக்கு விபத்து ஏற்பட்டு

அவருக்கு தலை, கால், காதில் அடிபட்டு இரத்தம் வலிய கிடந்தார். விபத்தை ஏற்படுத்திய Bollero வாகனம் அங்கு இருந்து சென்றுவிட்டது. பிறகு நாங்கள் ரஞ்சித்குமாரை ரோட்டின் பக்கம் பத்திரமாக தூக்கி வைத்துவிட்டோம். பின்னர், விபத்தை ஏற்படுத்திய Bollero வாகனம் மினாட்சிபுரம் தாண்டி கம்பிக்குடி அருகே ஒரு பெண்னை இடித்து விட்டு ரோட்டிற்கு கீழே தள்ளி விட்டார் என்று போலீசார் கூறினார்கள். பிறகு நாங்கள் ரஞ்சித்குமாரை 108 அம்புலன்ஸ்ல் ஏற்றி விட்டோம். பிறகு ரஞ்சித்குமாரை காரியாபட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். விபத்தை ஏற்படுத்திய நபரின் பெயர் மூபாரக் என்று தெரிந்து கொண்டேன். பிறகு ரஞ்சித்குமார் மேல் சிகிச்சைக்காக சென்று கொண்ட போது இறந்து விட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

ரஞ்சித்குமார் சாலையை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி திடிரென வாகனத்தில் கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். ரஞ்சித்குமார் மீது மோதியது அடையாளம் தெரியாத வாகனம் தான் என்றால் சரிதான். எதிரியின் பெயர் போலீசார் கூறி தான் என்றாலும், நேரடியா தெரியாது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் ரஞ்சித்குமார் மீது மோதிய வாகனத்தின் கலர், பதிவுஎண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும். விபத்து வழக்கில் நஷ்ட ஈடு பெற வேண்டும் என்ற நோக்கத்திலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியமளிக்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

| | |
|---|---|
| Calender Miscellaneous | : **CC.No. 394 /2024** |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness for | : Pw.4 |

| | |
|---|---|
| Name | : தங்கராசு |
| Father/Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day February of 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:-**

நான் தற்போது தேசிகனேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 08.07.2021 ம் தேதியன்று நான் வேலையை முடித்துவிட்டு எனது இருசக்கர வாகனத்தில் மதுரையிலிருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். ஆவியூர் டிவிஎஸ் அருகே இரவு 7.15 மணியளவில் நான் வந்த போது ரோட்டின் கிழக்கு பக்கம் கூட்டமாக இருந்தது. நான் சென்று பார்த்த போது எனது ஊரை சேர்ந்த ரஞ்சித்குமார் என்பவர் என தெரிய வந்தது. அவருக்கு கை, கால்,மூக்கு, காது அருகே அடிப்பட்டு இருந்தது. என்னை காப்பாற்றுங்கள் என்று ரஞ்சித்குமார் என்னிடம் கூறினார். விபத்து நடந்த சம்மந்தமாக அசா.1 முனியசாமியிடம் கூறினேன். பிறகு ரஞ்சித்குமாரை காரியாபட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் போது நானும், ஆம்புலன்சில் சென்றேன். ரஞ்சித்குமாரை மதுரையிலிருந்து அருப்புக்கோட்டை வரும் வழியே வந்த பொலீரோ வாகனம் மோதியதால் விபத்து ஏற்பட்டது என்று கேட்டு தெரிந்து கொண்டேன். ரஞ்சித்குமார் மேல் சிகிச்சைக்காக

கொண்டு செல்லும் போது இறந்துவிட்டார் என்று தெரிந்து கொண்டேன். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

கூட்டமாக ஆட்கள் இருந்த போது அதை என்ன என்று பார்க்க சென்ற போது விபத்து பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். மற்ற விபரங்கள் அனைத்தையும் பிற நபர்கள் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் ரஞ்சித்குமாருடன் ஆம்புலன்சில் செல்லவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த இடம் இருட்டாக இருந்தது என்றும், அந்த இடம் அடிக்கடி விபத்து ஏற்படக்கூடிய இடம் என்றால் சரிதான். எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :-**

இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

| | | |
|---|---|---|
| Calender Miscellaneous | : | **CC.No. 394 /2024** |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of witness for | : | Pw.5 |

| | | |
|---|---|---|
| Name | : | ஆதிமூலம் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05$^{th}$ day February of 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:–**

நான் தற்போது மதுரையில் உள்ள சொட்டதட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ டிரைவராக வேலை செய்து வருகிறேன். சுமார் 4 வருடத்திற்கு முன்பு வேலம்மாள் மருத்துவமனையில் சவாரியில் இருந்த போது சுமார் 6.45 மணியளவில் ரஞ்சித்குமாரின் மனைவி பவாணி என்பவர் போன் மூலம் தனது கணவர் டிவிஎஸ் கம்பெனி அருகே வந்த போது தனது கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். பிறகு தனது கணவரை மேல்சிகிச்சைக்காக மதுரைக்கு அழைத்து வருவதாக கூறிய போது நான் மதுரை வேலம்மாள் மருத்துவமனை அருகே காத்து கொண்டிருந்தேன். பின்னர் சுமார் 7.30 மணியளவில் ரஞ்சித்குமார் ஆம்புலன்சில் வந்தார். பிறகு அவரை மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதித்தார்கள். அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அவர் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள். பிறகு மறுநாள் காலை நானும், ரஞ்சித்குமாரின் அப்பாவும் ஆவியூர் காவல் நிலைத்திற்கு சென்றோம். அங்கு

ரஞ்சித்குமாரின் அப்பா புகார் கொடுத்தார். நான் அதில் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் **அசா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

விபத்து பற்றி எனக்கு போன் மூலம் தான் தகவல் தெரிந்தது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :–**

இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender Miscellaneous : **CC.No. 394 /2024**

Preliminary Register :

Sessions :

Deposition of witness for : Pw.6

Name : பவாணி
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day February of 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:–**

நான் தற்போது மதுரையில் உள்ள சிந்தாமணியில் வசித்து வருகிறேன். நான் குடும்ப தலைவியாக இருந்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்து போன ரஞ்சித்குமார் எனது கணவர் ஆவார். கடந்த 08.07.2021ம் தேதி தேசிகனேந்தலில் உள்ள வீட்டில் இருந்த போது தங்கராசு என்பவர் சுமார் மாலை 6.45 மணியளவில் எனக்கு போன் மூலம் எனது கணவரை மதுரையிலிருந்து அருப்புக்கோட்டை செல்லும் வழியில் வந்த பொலிரோ வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். பிறகு எனது கணவரை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு எடுத்து வருவதாக கூறியவுடன் நான் எனது கணவரை மதுரை அரசு மருத்துவமனையில் பார்த்த போது அவருக்கு கை, கால், காது ஆகிய இடங்களில் காயங்கள் இருந்தது. மருத்துவர்கள் என்னிடம் எனது கணவர் சிகிச்சைக்கு வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:—**

விபத்து பற்றி எனக்கு போன் மூலம் தான் தகவல் தெரிந்தது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :—**

இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender Miscellaneous : **CC.No. 394 /2024**

Preliminary Register :

Sessions :

Deposition of witness for : Pw.7

Name : **கார்த்திக்கைசெல்வம்**
Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day February of 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:–**

நான் தற்போது தேசிகனேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். நானும், கிருஷ்ணமூர்த்தி என்பவரும் கடந்த 2021 ம் வருடம் டிவிஎஸ் நிறுவனம் அருகே நின்று கொண்டிருந்த போது சுமார் இரவு 8.00 மணியளவில் போலீசார் டார்ச் லைட் வெளிச்சத்தில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நானும், கிருஷ்ணமூர்த்தியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் **அசா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

எத்தனை போலீசார் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்றால் 2 நபர்கள் இருந்தார்கள். போலீசார் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்றால் இருசக்கர

வாகனத்தில் வந்தார்கள். நான் கையொப்பம் செய்த பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்பது தெரியுமா என்றால் விபத்து வழக்கு சம்மந்தாக எழுதியிருந்தது. நான் எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன்.

**மறுவிசாரணை :—**

இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

| | |
|---|---|
| Calender Miscellaneous | : **CC.No. 394 /2024** |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness for | : Pw.8 |

| | |
|---|---|
| Name | : கிருஷ்ணமூர்த்தி |
| Father/Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 05th day February of 2026

( எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை:–**

நான் தற்போது தேசிகனேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். நானும், கார்த்திக்கைசெல்வம் என்பவரும் கடந்த 08.07.2021 ம் தேதி டிவிஎஸ் நிறுவனம் அருகே நின்று கொண்டிருந்த போது சுமார் இரவு 10.00 மணியளவில் போலீசார் டார்ச் லைட் வெளிச்சத்தில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அந்த பார்வை மகஜரில் நானும், கார்த்திக்கைசெல்வமும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

நான் கையொப்பம் செய்த பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்பது தெரியுமா என்றால் விபத்து வழக்கு சம்மந்தாக எழுதியிருந்தது. சம்பவ இடத்தில் வாகனம் எதுவும் நின்று கொண்டிருந்தா என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. காவல் துறையினர் தயவு வேண்டும் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. மகஜரில் உள்ள கையொப்பத்தை பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :–**

இல்லை.